சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி

**முன்னிலை : திரு. D. மாரிக்காளை, B.Sc., M.L.,**

**சார்பு நீதிபதி, கோவில்பட்டி.**

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ம் நாள் வெள்ளிக்கிழமை

**IA.No.10/2025**

**in**

**O.S.No.68/2013**

1. சொரூபராணி
2. தங்கஜோதி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சிவாஜி ராஜன்
2. ஜெயஸ்ரீ
3. மேகநாதன்
4. கேசவன்
5. ரமணன்
6. அமுதா
7. செந்தில்குமார்
8. தீபலட்சுமி .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றம் முன்பு 29.07.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.ஆண்ட்ரூஸ்சாம்ராஜ், அவர்கள் ஆஜராகியும், 1, 6 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ராஜேஷ்கண்ணன், அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5, 7,8 ம் எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜரின்றி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

1. மனுதாரர்கள் தரப்பில், வா.சா.ஆ.4, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் உள்ள மனுதாரர்கள்/வாதிகளின் தாயார் லேட்.புஸ்காந்தியம்மாளின் கைரேகைகளை ஒப்பிட்டு முழுமையான அறிவியல்

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:25 +0300

பகுப்பாய்வுக்கு உட்படுத்தி கைரேகை நிபுணரின் ஒரு முழுமையான அறிக்கையை சமர்பிக்க, ஒரு நீதிமன்ற ஆணையரை நியமித்து, வா.சா.ஆ.4, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் உள்ள கைரேகைகளை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தி, கைரேகை நிபுணரின் அறிக்கை பெற வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் 26 விதி 10(a) மற்றும் பிரிவு 151ன் கீழ், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். அசல் வழக்கானது தபசில் சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.4, 01.06.2000ம் தேதிய பதிவு செய்யப்பட்ட உயில் இந்திய பதிவுச் சட்டப்படி பதிவு செய்யப்பட்ட உயிலாக இருந்தபோதிலும், மேற்படி வா.சா.ஆ.4, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களின் அதன் நம்பகத்தன்மை மற்றும் உண்மை தன்மையை நிரூபிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. மேலும் கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணை நிலைமையில் உள்ள அசல் வழக்கு எண்.296/2013ல் தாவா செய்யப்படும் 27.08.2000ம் தேதிய உயில் மற்றும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 18.06.2003ம் தேதிய பதிவு செய்யப்படாத உயில் ஆகியவற்றை பற்றி இந்த வழக்கில் எழுவினா வனையப்பட்டுள்ளது. எனவே கோவில்பட்டி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் உள்ள அசல் வழக்கு எண்.296/2013ம் சமூகம் நீதிமன்றத்தில் உள்ள மேற்படி வழக்கு எண்.68/2013ம் ஒருசேர விசாரித்து நீதிமன்றம் தீர்ப்பளிக்காவிட்டால் இருவேறுபட்ட நீதிமன்ற தீர்ப்புகளில் முரண்கள் ஏற்படவும், அதனால் வாதிகளின் வழக்குகள் பாதிகப்படவும் வாய்ப்புகள் உள்ளது. இதுசம்பந்தமாக இரண்டு வழக்குகளையும் சேர்த்து நடத்த தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய உத்தேசித்துள்ளார்கள். மேற்படி மூன்று

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:30 +0300

ஆவணங்களான வா.சா.ஆ.4, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆகியவற்றில் உள்ள மனுதாரர்களின் தாயார் லேட்.புஸ்பகாந்தியம்மாளின் கைரேகைகளை ஒப்பிட்டு அறிவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி கைரேகை நிபுணர் மூலம் அறிக்கை பெற உத்தரவிட வேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 6ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. ரீஒப்பன் மனுவின் அவிடவிட்டில் கண்ட விஷயங்கள் யாவும் மேற்படி அசல் பிராது, எதிர்வழக்குரை மற்றும் வழக்கின் ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் அடிப்படையில் வனையப்பட்ட Question of law and question of fact அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டியவை. அதனை மனுதாரர்கள் தற்சமயம் அசல் வழக்கில் தற்போது தீர்ப்புக்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் எக்ஸ்பர்ட் ஒப்பீனியனுக்கான மனுவை சேர்ந்து தாக்கல் செய்ய சட்டப்படி மனுதாரர்களுக்கு எவ்வித சட்ட அனுதாபமும் கிடைக்கக்கூடியதில்லை. ஏனென்றால் 01.06.2000 உயிலுக்கு பின்பு 18.06.2003ல் உயில் உள்ளதால் கடைசி உயில் எதுவோ அதுவே சட்டப்படி முதன்மைபெறும். மேலும் 18.06.2003 உயில் இருக்கும் பொழுது மனுதாரர்கள்/வாதிகளின் உயிலான 01.06.2000 உயிலைப் பற்றி எவ்வித வல்லுநர் கருத்துக்கும் அனுப்ப சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மேற்படி உயிலானது சட்டப்படி பதிவு செய்ய வேண்டும் என எவ்வித சட்டப் பிரிவுகளிலும் கூறவில்லை. ஒரு உயிலாக இருந்தால் மட்டுமே அது பொருந்தும். இரண்டு உயில் இருக்கையில் எது கடைசி உயிலோ அதுதான் சட்டப்படி செல்லுபடியாகும். மனுதாரர்கள் 08.10.2018லிருந்து இதுவரை 7 வருடங்கள் விசாரணை நடத்தியும் மேற்படி சட்டப்படி அதனை நிரூபிக்க நடவடிக்கை எடுக்காது 7 வருடங்களுக்கு பிறகு தற்சமயம் மேற்படி 2013 வழக்கை இழுத்தடிக்க எண்ணி மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:34 +0300

எனவே மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்

**1. இம்மனு அனுமதிக்கத்தக்கதா?** என்பதே ஆகும்

**<u>5. பிரச்சனை எண்–1 :–</u>**

i) இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள் கேட்கப்பட்டன. மனு, அபிடவிட், எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி, எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/ வாதிகளால், இம்மனுவின் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக பிராது தபசில் சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) இம்மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை மற்றும் எவ்வித ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

iii) இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள் மற்றும் வழக்காவணங்களை கவனமாக பரிசீலிக்கையில், அசல் வழக்கானது இம்மனுவின் மனுதாரர்கள்/வாதிகளால், இம்மனுவின் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக பிராது தபசில் சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அசல் வழக்கானது இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் முடிக்கப்பட்டு, இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டு, தீர்ப்புரைக்காக வாய்தா வந்த நிலையில், வாதிகள் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.4 மற்றும் பி.சா.ஆ.1, பி.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் உள்ள மனுதாரர்களின் தாயார் லேட்.புஸ்பகாந்தியம்மாளின்

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:41 +0300

கைரேகையை ஒப்பீடு செய்ய ஆணையர் அவர்களை நியமனம் செய்ய உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதேசமயத்தில் 1,6 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் 08.10.2018 லிருந்து இதுவரை 7 வருடங்கள் விசாரணை நடத்தியும் மேற்படி சட்டப்படி அதனை நிரூபிக்க நடவடிக்கை எடுக்காது 7 வருடங்களுக்கு பிறகு தற்சமயம் மேற்படி 2013 வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனு தாக்கல் செய்திருப்பது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

iv) இந்நிலையில் வழக்காவணங்களை பரிசீலிக்கையில், மனுதாரர்கள் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள வா.சா.ஆ.4, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் உள்ள வாதிகளின் தாயார் புஷ்பகாந்தியம்மாள் என்பவரது கைரேகைகளை ஒப்பீடு செய்து அறிவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்த நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக்கோரும் பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடியதா? என்பதை பொறுத்து கவனமாக பரிசீலிக்கையில், வா.சா.ஆ.4 ஆவணமானது 01.06.2000 ம் தேதியிட்ட பதிவு உயில் ஆவணமாக உள்ளது. பி.சா.ஆ.1 ஆவணமானது 27.08.2000 ம் தேதியிட்ட பதிவு உயில் ஆவணமாக உள்ளது. பி.சா.ஆ.3 ஆவணமானது 23.08.1973 ம் தேதியிட்ட அடமான கடன் பத்திரமாக உள்ளது. மேற்படி வா.சா.ஆ.4, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் 1 ம் மனுதாரரின் தாயாரான புஷ்பகாந்தியம்மாள் என்பவரது கைரேகைகள் உள்ளது தெளிவாக புலனாகிறது. அதேசமயத்தில் வா.சா.ஆ.4 ஆவணமான 01.06.2000 ம் தேதியிட்ட புஷ்பகாந்தியம்மாளின் அசல் உயில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அதில் முதல்பக்கத்தின் பின்புறம் மேற்படி புஷ்பகாந்தியம்மாளின் இடதுகை பெருவிரல் ரேகை தெளிவாக காணப்படுகிறது. ஆனால் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆவணங்களை கவனமாக பரிசீலிக்கையில், பி.சா.ஆ.3

MARIKKALAI D
Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:44 +0300

ஆவணம் பதிவு அடமான கடன் பத்திரத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகலாக உள்ளது. மேலும் அந்த ஆவணத்தில் முதல்பக்கத்தின் பின்பக்கம் மேற்படி புஷ்பகாந்தியம்மாளின் இடதுகை பெருவிரல் ரேகை முழுமையாக இல்லாமல் பகுதி மட்டுமே உள்ளது. மேலும் பி.சா.ஆ.1 ஆவணம் 27.08.2000ம் தேதிய புஷ்பகாந்தியம்மாளின் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலாக உள்ளது. இந்நிலையில் மேற்படி மூன்று ஆவணங்களிலும் உள்ள புஷ்பகாந்தியம்மாளின் இடதுகை பெருவிரல் ரேகையை ஒப்பீடு செய்ய பரிகாரம் கோரியுள்ள நிலையில், வா.சா.ஆ.4 ஆவணம் மட்டுமே அசல் ஆவணமாக உள்ள நிலையிலும், இதர ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல்களாக உள்ள நிலையிலும், அதில் குறிப்பாக பி.சா.ஆ.3 ஆவணத்தில் புஷ்பகாந்தியம்மாளின் இடதுகை பெருவிரல் ரேகை ஜெராக்ஸ் முழுமையாக இல்லாமல் பகுதியாக மட்டுமே உள்ள நிலையில், மேற்படி மூன்று ஆவணங்களில் உள்ள கைரேகைகளை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்த சட்டப்படி இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் 2013ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு, 13 வருடங்களாக நிலுவையில் இருந்து வரும் நிலையில், இருதரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டு வாதுரை கேட்கப்பட்ட நிலையில், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது மிகவும் காலதாமதமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவில் மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடும் மூன்று ஆவணங்களில் இரண்டு ஆவணங்களும் ஜெராக்ஸ் ஆவணங்களாக உள்ள நிலையில் அதில் காணப்படும் கைரேகையை ஒப்பீடு செய்ய பரிகாரம் கோரியுள்ளது ஏற்புடையது இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

iv) மேலே விவரித்ததின் அடிப்படையிலும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள் மற்றும் வழக்காவணங்களின் அடிப்படையிலும், இம்மனுவில் குறிப்பிட்டுள்ள அசல் வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.4, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆகிய ஆவணங்களில் உள்ள வாதிகளின் தாயார்

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:48 +0300

புஷ்பகாந்தியம்மாள் என்பவரது கைரேகைகளை அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்த பரிகாரம் கோரியுள்ள நிலையில், வா.சா.ஆ.4 ஆவணம் மட்டுமே அசல் ஆவணமாக உள்ள நிலையிலும், பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.3 ஆவணங்கள் ஜெராக்ஸ் நகல்களாக உள்ள நிலையிலும், அதில் குறிப்பாக பி.சா.ஆ.3 ஆவணத்தில் புஷ்பகாந்தியம்மாளின் இடதுகை பெருவிரல் ரேகை ஜெராக்ஸ் முழுமையாக இல்லாமல் பகுதியாக மட்டுமே உள்ள நிலையிலும், அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு 13 வருடங்கள் ஆகிவிட்ட நிலையிலும், இருதரப்பு வாய்மொழி சாட்சியங்கள் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, பதில் வாதுரைக்காக உள்ள நிலையிலும், மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றம் இந்த அசல் வழக்கினை 3 மாத காலத்திற்கள் விசாரித்து தீர்ப்பு பகர வேண்டும் என Trop.No.532/2025 மனுவில் உத்தவிட்டுள்ள நிலையிலும், இம்மனு மிகவும் காலதாமதமானது என்ற அடிப்படையிலும், மனுதாரர்கள் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்ற நிலையிலும், இந்த மனுவினை அனுமதிக்க எவ்வித முகாந்திரமும் இல்லாத நிலையிலும், இந்த மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடுவதுதான் சட்டப்படி சரியானது என முடிவு செய்து, இந்நீதிமன்றம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**6. முடிவாக, இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சுருக்கு சொல்லச் சொல்ல அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பிரதி எடுக்கப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, கையெழுத்திடப்பட்டு, 2026 ம் ஆண்டு

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:52 +0300

ஆகஸ்ட் மாதம் 07 ம் தேதி வெள்ளிக்கிழமை என்னால் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:55 +0300

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

<u>**பின் இணைப்பு**</u>

<u>**இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–**</u> இல்லை

MARIKKALAI D

Digitally signed by MARIKKALAI D
Date: 2026.08.07 14:50:58 +0300

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.

சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி
**IA.No.10/2025 in**
**O.S.No.68/2013**
நேரிய உத்தரவு
நாள் : 07.08.2026